**பத்தேகம பிரதேச சபை**
**காலி மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2016 ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2017 பெப்ரவரி 21 ஆந் திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 பெப்ரவரி 17 ஆந் திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், 2016 ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2017 ஆகஸ்ட் 16 ஆந் திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் விவரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினை தவிர்ந்து, பத்தேகம பிரதேச சபையின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு உள்ளூராட்சி ஓய்வூதிய நிதியத்திற்குகு செலுத்த வேண்டிய ரூபா 6,301,262 தொகையான பங்களிப்புத் தொகை கடன் கொடுத்தோரின் கீழ் கணக்கீடு செய்திருக்கவில்லை.

#### 1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

நிதிக் கூற்றுகளில் காட்டப்பட்டுள்ள கூட்டுத் தொகை 16,593,207 தொகைக்கான 09 கணக்கு விடயங்கள் தொடர்பாக மீதிகள் மற்றும் அதனொடு தொடர்புடைய துனை பதிவேடுகள் மற்றும் அறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள மீதிகளிடையே அவதானிக்கப்பட்ட சமமின்மைகளின் கூட்டுத்தொகை ரூபா 10,425,033 தொகையாக இருந்தது.

#### 1.3.3 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) நீண்டகாலமாகக் நிதிக் கூற்றுகளில் முன்கொண்டு வந்து காணப்படும் கூட்டுத்தொகை ரூபா 12,161,141 இற்கான செலுத்த வேண்டிய 07 கணக்கு மீதிகளை தீர்த்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) (i) நீண்ட காலமாக கணக்குகள் முன் கொண்டு வந்து காணப்படும் கூட்டுத் தொகை ரூபா 4,928,588 தொகைக்கான 06 செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளை தீர்த்துக் கொண்டிருக்கவில்லை.

(ii) 2013 ஆண்டிற்கும் முன்னர் இருந்து பொது வைப்புக் கணக்கில் முன் கொண்டு வந்து காணப்படும் ரூபா 276,585 தொகைக்கான பெறுமதி கூட்டிய வரி மீதி மற்றும் ரூபா 94,413 தொகைக்கான தேசத்தை கட்டியெழுப்பும் வரி மீதியை தீர்த்திருக்கவில்லை.

### 1.3.4 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

கூட்டுத்தொகை ரூபா 15,550 தொகைக்கான தார் இருப்பு தொடர்பாக அட்டவணைகளும், ரூபா 18,394,739 தொகைக்கான வைப்புகள் மற்றும் ரூபா 3,042,880 தொகைக்கான பதவியணிக் கடன் தொடர்பாக காலப்பகுப்பாய்வு மற்றும் விரிவான தகவல்களும் சமர்பிக்கப்படாமையால் கணக்காய்வின் போது அவற்றை திருப்திகரமாக பரிசோதனை மேற்கொள்வதற்கு முடியாதுள்ளது.

### 1.3.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத தீர்மானங்களுடன் இணக்கமின்மை

கீழே விபரிக்கப்பட்டுள்ள சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகளுக்கு இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங் களுடன் தொடர்பு | | இணக்கமின்மை |
|---|---|---|
| இலங்கை குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | | |
| (i) | 570 மற்றும் 571 (1) (2) | 2016 திசெம்பர் 31 திகதி உள்ளவாறு 02 வருடகாலத்தை மிகைத்துள்ள கூட்டுத் தொகை ரூபா 2,528,212 இற்கான 04 வகையான வைப்புக்கள் தொடர்பாக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| (ii) | நி.பி. 1645 மற்றும் 1646 | சபையின் 13 வாகனங்கள் தொடர்பாக நாளாந்த ஓட்ட அட்டவணைகள் மற்றும் மாதாந்த பொழிப்புக்கள் கணக்காய்விற்குச் சமர்பித்திருக்கவில்லை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

கணக்காய்விற்கு சமர்பிக்கபட்டிருந்த நிதிக்கூற்றுகளின் பிரகாரம் 2016 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 18,235,414 தொகையாகக் காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 11,784,647 தொகையாக காணப்பட்டது. முன்னைய ஆண்டுடன் ஒப்பீடு செய்யும் போது மீளாய்வாண்டிற்கான நிதி விளைவுகளில் ரூபா 6,450,767 இற்கான வளர்ச்சி ஒன்றை காட்டியது.

### 2.2 தொழிற்படு மூலதன முகாமைத்துவம்

முன்னைய ஆண்டுடன் ஒப்பீடு செய்யும் போது மீளாய்வாண்டின் நடைமுறை மற்றும் விரைவு விகிதாசாரம் திருப்திகரமான நிலைமையொன்றில் காணப்படவில்லை என அவதானிக்கப்பட்டது.

### 2.3 வருமான நிருவாகம்

#### 2.3.1 வீதவரி மற்றும் வரி

மீளாய்வாண்டின் போது அறவிடப்பட வேண்டிக் காணப்பட்ட கூட்டுத்தொகை ரூபா 8,209,200 தொகைக்கான வீத வரி மற்றும் ரூபா 197,656 இற்கான வீதவரி மிகைக்கட்டண சிட்டையிடப்பட்டவைகளில் ரூபா 1,802,707 தொகை மாத்திரம் ஆண்டின் போது அறவிடப்பட்டமையால் வருட இறுதியில் உள்ளவாறு நிலுவை வீத வரி மீதி ரூபா 6,604,150 தொகையாகக் காணப்பட்டது.

#### 2.3.2 ஏக்கர் வரி

வருட ஆரம்பத்தில் காணப்பட்ட ரூபா 24,683 இற்கான நிலுவையில் மற்றும் ரூபா 18,350 இற்கான ரூபா 16,457 தொகை மாத்திரம் ஆண்டின் போது அறவிடப்பட்டிருந்தமையினால் வருட இறுதியில் உள்ளவாறு மேலும் ரூபா 26,576 இற்கான நிலுவையொன்று காணப்பட்டது.

#### 2.3.3 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

மாகாண சபையின் பிரதான செயலாளர் மற்றும் ஏனைய அதிகாரிகளிடமிருந்து 2016 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நீதி மன்றத் தண்டப் பணமாக ரூபா 1,697,711 தொகை மற்றும் முத்திரை கட்டணமாக ரூபா 33,932,314 தொகை கிடைக்க வேண்டியிருந்தது.

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ திறமையின்மை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) (i) பதவியணித் திட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட பதவிகளில் காணப்பட்ட வெற்றிடங்களை நிரப்புவதற்கும் 28 மிகைப் பதவிகளை முறைப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ii) ஆரம்ப தொகுதியைச் சேர்ந்த இரண்டு ஊழியர்களுக்கு முகாமைத்துவ உதவியாளர் பதவியில் கடமைகள் சாட்டப்பட்டிருந்ததுடன், இரண்டு தொழிலாளர்களுக்கு சாரதிக் கடமைகள் சாட்டப்பட்டிருந்தன.

(ஆ) சபைக்குச் சொந்தமான 04 வங்கி நடைமுறைக் கணக்குகளில் காணப்பட்ட மாதாந்த சராசரி மீதியின் கூட்டுத்தொகை ரூபா 3,496,860 தொகையாக காணப்பட்டதுடன், இந்த பணத்தை முதலீடு செய்து வட்டி வருமானத்தை உழைத்தல் தொடர்பாக சபை கவனம் செலுத்தியிருக்கவில்லை.

(இ) நூலக வளங்களை அபிவிருத்தி செய்யும் குறிக்கோளுடன் 2001 ஆண்டின் போது நூலக அபிவிருத்தி நிதியத்திலிருந்து வழங்கியிருந்த ரூபா 137,774 தொகை சேமிப்பு கணக்கொன்றில் வைப்பு செய்யப்பட்டு காணப்பட்டது.

(ஈ) நிதி அமைச்சின் செயலாளரினால் 2015 ஜூலை 10 திகதி வெளியிட்டிருந்த அரச நிறுவனங்களில் சிதைவுற்ற வாகனங்கள் பயன்படுத்துவது தொடர்பாக 02/2015 இலக்க சுற்றறிக்கையின் 02 ஆம் பந்தியின் பிரகாரம் சபைக்கு சொந்தமான பாவணைக்கு உதவாத கப் வண்டி தொடர்பாக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை

(உ) (i) பிரதேச சபைகளை வலுப்படுத்தும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 2014 நவம்பர் 27 திகதி கொள்வனவு செய்திருந்த 10 டயர்கள் 2017 ஏப்ரல் 06 திகதி வரை களஞ்சியத்தில் பயன்படுத்தாமல் காணப்பட்டது.

(ii) 2009 ஆண்டிற்கு முன்னர் இருந்து கொள்வனவு செய்திருந்த மோட்டார் ஒன்று, FM மைக் மற்றும் DVD இயந்திரம் 2017 ஏப்ரல் 06 திகதி வரை எதுவித பயனுள்ள வேலைக்கும் பயன்படுத்தப்படாமல் களஞ்சியத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்தது.

**3.2 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

2014 ஆண்டின் போது சபைக்கு வழங்கியிருந்த மோட்டர் கிரேடர் இயந்திரம் அந்த நாள் முதல் மீளாய்வாண்டு இறுதிவரை 260 இயந்திர மணித்தியாளங்கள் மாத்திரம் ஓட்டப்பட்ட நிலையில் காணப்பட்டதுடன், 2016 ஆண்டிற்கான காப்புறுதி அணவல் பெறுவதற்காக ரூபா 114,642 தொகை செலவிடப்பட்டிருந்தது.

**3.3 ஒப்பந்த நிருவாகம்**

கினிமல்லகஹ தொடங்கொட வாராந்த சந்தையின் கடைகளிடையே காணப்பட்ட தரையை கொங்கிரீட் பண்ணுதல் மற்றும் இடைத்தொடர்பு கொங்கிரீட் அச்சுக்கற்கள் பரப்பும் செயற்திட்டத்திற்கான நெறிமுறை அடிப்படை மானியத்தின் கீழ் ரூபா 1,000,000 தொகை வழங்கியிருந்ததுடன், 03 ஆம் இலக்க வேலை விடயத்தின் பிரகாரம் அறைகளுக்கு இடையே 03 அங்குல கனத்தில் கொங்கிரீட் பரப்புவதற்காக ரூபா 401,625 தொகை செலுத்தியிருந்த போதிலும், உரிய முறையில் போடப்படாமையால் கொங்கிரீட் கற்கள் வெளிக் கிளம்பி காணப்பட்டதுடன் சமப்படுத்தாமையினால் நீர் நிரம்பிக் காணப்பட்டது.

**3.4 திண்மக் கழிவுப்பொருள் முகாமைத்துவம்**

பத்தேகம பிரதேச சபை குப்பைகளை வகைப்படுத்தி பெற்றிருந்ததுடன் உக்க கூடிய குப்பைகளை சேதனப் பசளை உற்பத்தி செய்து, விற்பனை செய்வதற்காகவும் உக்காத குப்பைகளை விற்பனை செய்யவும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. கழிவுப் பொருள் முகாமைத்துவம் வெற்றிகரமாக செயற்படுத்தியிருந்த போதிலும், குப்பை முகாமைத்துவ வளவிற்காக சுற்றாடல் அனுமதிப்பத்திரம் ஒன்று பெற்றிருக்கவில்லை.

**4 நல்லாளுகையும் கணக்களிப் பொறுப்பும்**

**4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு**

மீளாய்வாண்டிற்காக பாதீட்டில் உள்ளடங்கியுள்ள 08 செலவு விடயங்களின் கூட்டுத்தொகை ரூபா 39,618,409 இற்கான சேமிப்பும், 03 வருமான விடயங்களின் கூட்டுத்தொகை ரூபா 31,601,538 இற்கான நெருங்கியிருக்காத இலக்கு வருமானமும் காணப்படாமையால் பாதீடு ஆக்கபூர்வமான நிதி முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவி ஒன்றாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

**4.2 உள்ளகக் கணக்காய்வு**

இலங்கை குடியரசின் நிதிப் பிரமாணங்கள் 133 மற்றும் 134 இன் ஏற்பாடுகள் மற்றும் உள்ளூராட்சி ஆணையாளர் (தென் மாகாண) இன் 2014 பெப்ரவரி 24 ஆம் திகதிய தபபா/யஹ/01/நா.ச.லே இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் உள்ளக கணக்காய்வு ஒன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**4.3 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுச் செயற்படுத்துதல்**

2009 ஜுன் 09 ஆந் திகதி DMA/2009 (i) இலக்க முகாமைத்துவ கணக்காய்வு சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு நிறுவுவதற்காக மீளாய்வாண்டு இறுதிவரையும் சபையினால் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## 5. முறைமைகள் மற்றும் கட்டுபாடுகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் அவ்வப்போது கணக்காய்வு ஐயவினாக்கள் மூலம் சபையின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டது. கீழே விவரிக்கப்பட்டுள்ள முறைமைகள் மற்றும் கட்டுபாட்டுப் பரப்புகள் தொடர்பாக விஷேட கவனம் செலுத்த வேண்டும்.

| முறைமைகள் | முறைமையில் முக்கிய குறைபாடுகள் |
|---|---|
| (அ) வாகன நிருவாகம் | (i) சபைக்குச் சொந்தமான வாகனங்களின் எரிபொருள் எரிதல் பரிசோதனை மேற்கொண்டிருக்கவில்லை. |
| | (ii) விளைவற்ற வாகனங்களை திருத்துவதற்கு அல்லது அகற்றுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| | (iii) நாளாந்த ஓட்ட அட்டவணை, மாதாந்த செயலாற்றுகை பொழிப்பு கணக்காய் விற்குச் சமர்ப்பித்திருக்கவில்லை. |
| (ஆ) கணக்கீடு | (i) சபையினால் நிலையான சொத்துக்கள் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. |
| | (ii) வைப்புக்கான பதிவேடு நாளது வரை பேணப்பட்டிருக்காததுடன், வருட இறுதித் திகதியில் உள்ளவாறு மீதியினை முன் கொண்டு வந்திருக்கவில்லை. |
| | (iii) கடன்கொடுத்தோர் பதிவேடு முறைப்படி பேணப்பட்டிருக்கவில்லை. |
| (இ) வருமான நிருவாகம் | (i) நிலுவை வருமானத்தை அறவீடு செய்வதற்காக முறையான வேலைத் திட்டமொன்று செயற்படுத்தியிருக்க வில்லை. |
| | (ii) முத்திரைக் கட்டண வருமானம் மற்றும் நீதிமன்றத் தண்டப்பண வருமானம் நாளது வரை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| | | (iii) | வங்கி நடைமுறை கணக்குகளில் காணப்பட்ட மிகைப் பணத்தை முதலீடு செய்து வருமானம் உழைப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| (ஈ) | பணியாளர் குழு முகாமைத்துவம் | (i) | பதவியணி வெற்றிடங்கள் நிரப்புவதற்கு அதேபோல் மேலதிக பதவியணியினை முறைப்படுத்துவதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| | | (ii) | சபையில் சேவையாற்றிய அலுவலர்களின் கடன் மீதிகளை அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| | | (iii) | பதவிக்குப் பொருத்தமான கடமைகளை சாட்டப்படாமல் ஊழியர்களுக்கு அதை விட கூடிய கடமைகள் சாட்டப்பட்டிருந்தன. |
| (உ) | கடன்கொடுத்தோர் மற்றும் கடன்பட்டோர் | (i) | முன்னைய ஆண்டுகள் முதல் காணப்படும் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் மீதிகளை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| | | (ii) | பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |